பசறை பிரதேச சபை - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பசறை பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, ஒன்றிணைந்த காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பசறை பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,839,338 வேலைக் கடன் கொடுத்தோர் இன் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	ஏதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்குகள் சரி செய்யப்படும்.
(ஆ)	மீளாய்வாண்டின் போது வாராந்த சந்தைக் கட்டத்திற்காக புதிய மின் இணைப்பைப் பெற்றுக் கொள்வதற்கு செலவிடப்பட்ட ரூபா 46,666 செலவினம் மூலதனமாக்கப் பட்டிருக்கவில்லை.	மேற்படி	மேற்படி
(இ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊழியர் கடன் மீதி ரூபா 11,800 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	மேற்படி	மேற்படி

1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொது வைப்பு மீதியில் உள்ளடங்கியிருந்தது ரூபா 1,554,820 பெறுமதியுடைய வைப்பு ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது.	எதிர்வரும் ஆண்டின் கணக்குகளுடன் பட்டோலைகள் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	வைப்பு பதிவேடு நாளது வரையாக்கப்படல் வேண்டும்.

1.7 இணங்காமைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	சட்டங்கள் விதிகள், பிரமானங்களுடான தொடர்பு	இணங்காமைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்			
(i)	நிதிப்பிரமாணம் 134(3)	05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் உள்ளகக் கணக்காய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.	எதிர்காலத்தில் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.	உள்ளகக் கணக்காய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
(ii)	நிதிப்பிரமாணம் 775	முன்னாள் தலைவர் / உப தலைவரால் பயன்படுத்தப்பட்ட பொருட் பதிவேடுகளுக்கு உள்ள 02 கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் நிலையான தொலைபேசி என்பன சபைக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.	பொருள் பதிவேட்டில் உள்ள அலுவலக உபகரணங்களை சபைக்கு கையளிக்குமாறு தொலைபேசியிலும், கடிதம் மூலமும் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	இந்த சொத்துக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 31,369,364 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 21,709,927 ஆகும்.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபை செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	வருமானமான மூலம்	2024 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை	2023 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை
		ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000
i.	ஆதன வரியும் வரியும்	12,734,457	12,890,586	9,632,093	5,843,000	7,256,159	6,738,358	4,886,434	4,521,000
ii.	வாடகை	20,476,722	25,736,508	22,035,908	24,679,768	21,477,122	20,461,415	15,949,298	20,709,616
iii.	அனுமதிப்பத்திரக் கட்டணம்	393,100	561,353	561,353	-	1,076,600	356,618	356,618	-
iv.	ஏனைய வருமானம்	16,060,500	24,088,249	6,529,625	23,110,731	17,171,500	24,872,931	11,158,849	21,405,622
	மொத்தம்	**49,664,779**	**63,276,696**	**38,758,979**	**53,633,499**	**46,981,381**	**52,429,322**	**32,351,199**	**46,636,238**

2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காாண்பிக்கப்படுகின்றது.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ) நிலுவை நீர்க் கட்டணம்		
05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டு வரப்படுகின்ற நிலுவை நீர்க்கட்டணம் ரூபா 308,586 மீளாய்வாண்டின் போதும் அறவிடுவதற்கோ அல்லது பொருத்தமான நடவடிக்கைகளோ எடுக்கப்பட்டிருக்கவில்லை.	நீண்ட காலம் முதல் கொண்டு வரப்படுகின்ற நிலுவையாக இருந்த நீர்கட்டணத்தை பதிவளித்தல் தொடர்பாக அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	நிலுவையாக இருந்த நீர்க்கட்டணம் தொடர்பாக விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ) நிலுவைக் கடை வாடகை		
(i) 05 வருடங்களுக்க மேற்பட்ட காலம் முதல் கொண்டு வரப்படுகின்ற நிலுவைக் கடை வாடகை ரூபா 20,570,716 மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை.	புத்தகங்களில் பதிவழிக்கப்பட வேண்டிய கடை வாடகைக்காக விடயப் பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் நிலுவைக் கடை வாடகை அறவிடுவதற்கும் உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது	நிலுவைக் கடை வாடகை அறவிடப்படல் வேண்டும்.

(ii)	பிரதேச கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் நிதியேற்பாடு மற்றும் பொதுச் சந்தை கடை உரிமையாளர்களிடம் இருந்து சேகரிக்கப்பட்ட ரூபா 44,770,559 நிதியை ஈடுபடுத்தி 2017 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட பொதுச் சந்தை கட்டிடத் தொகுதியின் 42 கடைகளில் இருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 16,559,330 கடை வாடகை நிலுவையாகக் காணப்பட்டது. அவ்வாறு கடைகளை அமைப்பதற்காக உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து பெறப்பட்டிருந்த கடன் தொகைக்கு உரிய மாதாந்த கடன் தவணைப் பணம் மற்றும் வட்டி ரூபா 507,445 ஆக இருந்த போதிலும் அந்த தொகையை செலுத்துவதற்கோ அல்லது பொதுச் சந்தைக் கட்டிடத் தொகுதியின் போதியளவான வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	கடை வாடகை ஆரம்ப மதிப்பீட்டில் 50 சதவீதம் குறைத்து அறவிடுவதற்கும் நீண்டகாலம் முதல் காணப்படுகின்ற நிலுவைக் கடை வாடகையை அறவிடுவது புறக்கணித்த கடை உரிமையாளர் தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	உடன்படிக்கையின் பிரகாரம் நிலுவைக் கடை வாடகையை அறவிட்டு உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து பெறப்பட்டிருந்த கடன் மற்றும் வட்டித் தொகை செலுத்துதல் வேண்டும்.
(iii)	2019 ஆம் ஆண்டின் போது ஆளுனரின் அங்கீகாரத்தின் பிரகாரம் பொதுச் சந்தை கட்டிடத் தொகுதியின் பழைய கடை உரிமையாளர்கள் 17 பேர்களுக்காவும் புதிய கடைகள் வாடகைக்கு வழங்குவதற்கு இருதரப்பினருக்கு இடையே உடன்படிக்கை செய்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கடை உரிமையாளர்களால் உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்ட ரூபா 4,765,000 மீள செலத்தாமல் கடை வாடகை செலுத்தாமல் வியாபார நடவடிக்கைகளை நடாத்திச் செல்கின்றனர்.	ஏடுகளில் இருந்து பதிவளிக்கக் கூடிய கடை வாடகைக்காக விடயப் பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் நிலுவைக் கடை வாடகையை அறவிடுவதற்கும் உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.	உடன்படிக்கையின் பிரகாரம் அறவிட வேண்டிய தொகை அறவிடல் வேண்டும்.
(இ)	முன்னைய ஆண்டிற்கும், மீளாய்வாண்டிற்காகவும் 04 தொலைத் தொடர்பு கோபுரங்களின் நிலுவை வருமானம் ரூபா 26,400 அறவிடப்படாது இருந்ததுடன் சபை அதிகார பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள தொலைத் தொடர்பு கோபுரங்கள் அமைந்துள்ள இடங்களை ஆய்வு செய்து இனங்காணப்பட்டிருக்கவில்லை.	தொடர்ச்சியான செயற்பாடுள்ள நிலைமையில் காணப்படுகின்ற தொலைத் தொடர்பு கோபுரங்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மெய்மையாய்வை மேற்கொண்டு வருமானம் மற்றும் நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும்.

2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடம் இருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 12,685,991 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 10,424,740 பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை.	பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப்பணத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் முத்திரைக் கட்டணம் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 85(ஆ) பிரிவின் பிரகாரம் பொது மக்கள் நடமாடுகின்ற சகல இடங்களிலும் மலசலகூட வசதிகள் வழங்குதல் சபையினால் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் சபையின் சந்தை வளவில் அமைந்துள்ள பெண் மற்றும் ஆண் மலசலகூடம் இரண்டும் எந்தவித பராமரிப்புக்கள் இல்லாமையின் காரணமாக அசுத்தமடைந்து காணப்பட்டதுடன் சுகாதாரமான மலசலகூடம் முறைமை ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.	பொது மலசலகூட முறைமை ஒன்று நிர்மாணிப்பதற்கு திட்டம் தயாரிக்கப்படுவதுடன் தற்காலிக மலசலகூடம் மற்றும் மலசலகூட முறைமை தயாரிக்கப்பட்டுள்ளது.	1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 85(ஆ) பிரிவின் பிரகாரம் பொதுப் பயன்பாடுகள் சேவை நடாத்திச் செல்லப்படல் வேண்டும்.
(ஆ)	புறநெகும செயற்திட்ட நிதியத்தின் கீழ் வேலை பூர்த்தி செய்யப்பட்டு மீளாய்வாண்டின் போது சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த நீர் சுத்திகரிப்பு செயற்திட்ட கட்டிடத்தில் காணப்படுகின்ற குறைபாடுகள், சுத்திகரிக்கப்பட்ட பின்னர் நீரை அகற்றுவதற்கு வடிகாண் முறைமை காணப்படாமை காண், நீர்ப் பம்பிக் கூடம் செயலிழந்தமை, நீர் சுத்திகரிப்பதற்காக பயன்படுத்தப்படுகின்ற இரசாயனப் பொருட்கள் ஈடுபடுத்தும் அளவு தொடர்பான பயிற்சி ஒன்று காணப்படாமை, பில்ல பெக்க மற்றும் புகுல் பெக்த நீர்த்தேக்கங்களில் இருந்து எடுத்து வரப்படுகின்ற குழாய் நீர் வசதிகள் களஞ்சியப்படுத்துவதற்கு நீர்தாங்கி இயலளவு போதியளவில் இல்லாமை மற்றும் சுத்திகரிப்பு நிலையத்தில் பதிக்கப்பட்டிருந்த குழாய் முறைமை ஒவ்வொரு இடங்களிலும் உடைந்து சென்றமை போன்ற குறைபாடுகள் காணப்பட்டதுடன் அதன்	நீர் சுத்திகரிப்பு நிலையத்தைப் பராமரித்தல் மற்றும் பதவியணியினை பயிற்றுவித்தல் மற்றும் ஆலோசனை சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.	பொது மக்களுக்கு சுத்தாமான குடிநீரை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	காரணமாக பிரதேசவாசிகளுக்கு செயற்திட்டத்தில் சரியான பயன்பாடு வழங்கப்பட்டிருக்கவில்லை.		
(இ)	கூட்டுப்பசளைத் தளத்திற்கு நுழைகின்ற வீதி ஒரு கிலோ மீற்றர் அளவான பகுதி தற்போது அபிவிருத்தி செய்யப்படாமையால் கூட்டுப்பசளைத் தளத்தில் நிலையான நீர் வழங்கல் காணப்படாமையின் காரணமாக இயந்திரங்கள் மற்றும் வாகனங்களைக் கழுவுதல் மற்றும் உக்காத கழிவுப் பொருட்களை கழுவுவதற்கு பௌசர் மூலம் எடுத்துச் செல்லப்படுகின்ற நீரைப் பயன்படுத்த வேண்டி ஏற்பட்டமை போன்ற கஸ்டமான பணிகள் காணப்பட்டது. அவ்வாறு 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் சேகரிக்கப்படுகின்ற உக்காத கழிவுப் பொருட்கள் கழிவுப் பொருள் தளத்தில் குழிகள் வெட்டி போடுதல் மற்றும் அவ்வாறு பல இடங்களில் குவித்து வைக்கப்பட்டிருந்தது.	நிலத்தின் உயரத்தின் பிரகாரம் வீதி அபிவிருத்தி செய்வதற்கு கணிசமான தொகை ஒன்று செலவிட வேண்டியிருந்தமையால் அவ்வாறான செலவினம் ஒன்றைச் செய்தல் கஸ்டமாக இருந்தமையால் ஏனைய செயற்திட்டங்களின் நிதியத்தை பெற்று நுழைவு வீதியை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.	முறையாக கழிவுப் பொருட்களை அகற்றுதல் வேண்டும்.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	1965 ஆம் ஆண்டு முதல் பிரதேச சபையில் வாராந்த சந்தை நடாத்திச் செல்லப்படுகின்ற காணியில் 1971 செப்தெம்பர் 07 ஆந் திகதி முதல் மேற்கொள்ளப்பட்ட அளவிடல் நில அளவைத் திட்ட இலக்கம் 29232 இன் பிரகாரம் 01 ஏக்கர் 02 றூட் 7.3 பேர்ச் நில அளவு காணப்பட்ட போதும் 2022 சனவரி 24 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட நில அளவைத் திட்டத்தின் பிரகாரம் அந்த நிலத்தின் அளவு 03 றூட் 23 பேர்ச் மாத்திரமாக காணப்பட்டதுடன் பழைய ஆவணங்களின் பிரகாரம் சபையினால் உரித்து கோரப்பட்டிருந்த காணியின் அளவில் 02 றூட் 24.3 பேர்ச் அளவு வெளித்தரப்பினரால் அனுமதியற்ற வகையில் குடியிருக்கின்றனர். 50 வருட காலம் கடந்திருந்த போதிலும் சபைக்குச் சொந்தமான காணியினை அளவிட்டு உரித்தை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவில் இருந்து சபைக்கு இந்தக் காணி அளவிடும் நடவடிக்கைகள் மேற்கொண்டு பிரதேச சபைக்கு கையளிக்குமாறு கோரப்பட்டுள்ளதுடன் காணியைக் கையேற்கும் போது பிரதேச சபை நிர்வாக விடயத்திற்குப் புறம்பான காரணங்களினால் இவ்வாறு காணியைக் கையேற்றல் நீண்ட காலமாக தாமதமடைவதற்கு காரணமாக இருந்தது.	சபைக்கு உரிமையுள்ள காணிகளின் உரித்தை தீர்த்து வைத்தல் வேண்டும்.
(ஆ)	1980 யூன் 16 ஆந் திகதி பசறை கிராம சபைக்கு மாஉஸ்ஸாகொல்ல அம்பலம சந்தியில் பொது மலசலகூடங்கள் 02 இனை நிர்மாணிப்பதற்காக	இந்த காணியினை சபைக்குக் கையளிக்குமாறு காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு	மேற்படி

கோணகெலேவத்தே இல் 02 றூட் காணிப் பகுதி ஒன்று காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் எழுத்து மூலம் கையளிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு வரையில் நிர்மாணிக்கப்பட்டிருந்த மலசலகூடங்களில் நுழைவதற்கு போதியளவான வீதி வசதிகள் வைக்காமல் மேற்கூறப்பட்ட காணிப்பகுதியில் அனுமதியற்ற வகையில் பல்வேறு தரப்பினரால் நிரந்தரக் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தது.	கோரிக்கை விடப்பட்டிருந்த போதிலும் அதற்காக நல்ல பதில் ஒன்று காண்பிக்கப்பட்டிருக்க வில்லை.	

3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	கடந்த ஆண்டில் பிரதேச அபிவிருத்தி உதவி செயற்திட்டத்தின் (LDSP) நிதியேற்பாடு ரூபா 26,076,033 செலவில் 2023 ஆம் ஆண்டில் வேலைகள் பூரத்தி செய்யப்பட்டு சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த புதிய சந்தைத் தொகுதிக் கட்டிடம் மண் சரிவு ஆபத்திற்கு உட்பட்டிருந்தது. அதன் காரணமாக கட்டிடம் அமைந்திருந்த நிலம் கணிசமான அளவு வெடித்திருந்தமை உட்பகுதியில் சுவர் மற்றும் டைல் வெடித்திருந்தமை மற்றும் கண்ணாடிக் கதவுகள் முழுமையாக உடைந்திருந்தது. கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு முன் 2022 ஏப்ரல் 28 ஆந் திகதி தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் நிலப் பரிசோதனை சான்றிதழ் பெறப்பட்டிருந்த போதிலும் சான்றிதழில் குறிப்பிடப்பட்ட விசேட நிபந்தனை இலக்கம் 04 இன் பிரகாரம் கட்டிடத்தை நிர்மாணிப்பதாயின் அதற்குரிய திட்டம் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திற்கு சமர்ப்பித்து (NBRO) திட்டத்திற்கு உரிய பரிந்துரை பெறுமாறு உரிய கடிதத்தில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் பரிந்துரை தொடர்பாக முகாமைத்துவம் கவனம் செலுத்தாமையின் காரணமாக இவ்வாறான ஆபத்துக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டிருந்தது.	உள்ளூராட்சித் திணைக்களத்தின் LDSP செயற்திட்ட பதவியணியினரால் சகல மேற்பார்வை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டதுடன் மண் சரிவால் ஏற்பட்ட பாதிப்பு தொடர்பாக மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்தின் (CECB) பரிசோதனை அறிக்கை ஒன்று பெற்று மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.	தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் நிலப் பரிசோதனை சான்றிதழைப் போன்று அதற்குரிய திட்டம் அந்த நிறுவனத்திற்கு சமர்ப்பித்து பரிந்துரை மற்றும் ஆலோசனை பெற்று நிர்மாணித்தல் வேண்டும்.
(ஆ)	2016 சனவரி 01 முதல் 2023 சனவரி 31 ஆந் திகதி வரை நாளாந்த சேவையில் ஈடுபடுத்தப்பட்ட 36 ஊழியர்களுக்காக செலுத்த வேண்டிய ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியப் பங்களிப்புத் தொகை ரூபா 768,976 செலுத்தப்பட்டிருக்கவில்லை. இந்த பங்களிப்புப் பணம் செலுத்துதலின் தாமத	சபையில் போதியளவில் சுய வருமானம் காணப்படாமையினாலும், ஊழியர்களிடமிருந்து அறவிட்டு அனுப்ப முடியாமையினாலும் பங்களிப்புப் பணம் செலுத்த	குறித்துரைத்த காலத்தில் ஊழியர் சேமலாப நிதியத்தைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் மிகைக் கட்டணத்தை

காலத்திற்கு ரூபா 374,909 மிகைக் கட்டணம் செலுத்துவதற்கு சபைக்கு ஏற்பட்டிருந்தது. மிகைக் கட்டணத் தொகையை செலுத்துதல் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்கண்டு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	முடியாதிருந்ததுடன் முழுத் தொகையும் 2024 மார்ச் 25 ஆம் திகதி வரையில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	செலுத்துவதற்குரிய பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடம் இருந்து அறவிடல் வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

பாதீட்டுக் கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டிற்காக பிரதேச சபை தயாரித்திருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த வருமானம் மற்றும் செலவினம், ஆண்டில் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்தை ஒப்பீடு செய்த போது 04 வருமான விடயங்களில் 22 சதவீதம் முதல் 104 சதவீதம் வரையும், 03 செலவின விடயங்களில் 29 சதவீதம் முதல் 59 சதவீதம் வரையும் முரண்கள் காணப்பட்டது. இதன் பிரகாரம் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.	2024 ஆம் ஆண்டின் இறுதியின் போது மின்சாரம், வாகனக் காப்புறுதி மற்றும் வாகன பழுதுபார்த்தல் முகாமைத்துவம் செய்யப்பட்டதன் காரணமாக நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.	வருமான செலவினங்கள் தொடர்பான முரண்களை குறைத்தல் வேண்டும்.